3 . கிருஷ்ணனை வர்ணிக்கும் மங்கள கீதமாகும்.

இராகம் : பைரவி  தாளம் : த்ரிபுட

ஆ : ஸ க ரி க ம ப த* நி ஸ  20-வது மேளத்தின்

அ : ஸ் நி த ப ம க ரி ஸ  ஜன்யம்

### பல்லவி

கனககுண்டலம் கையில்கங்கணம் காலில்சதங்கை கலகலக்குதே
இடையில் பீதாம்பரமும் மார்பில் பதக்கமும் மின்னுதே (கனக)

### அனுபல்லவி

மனபயம்தனை போக்கிடவே மது, முர, நரகாசுரனை
மடித்த மாதவனே சூர்ய நாராயணா (கனக)

### சரணம்

காளியன்மேல் நர்த்தனம் செய்தார் கோவர்த்தனனைக் கைக்குடையாய் பிடித்தாய்
கோதை சீதையைக் கொண்டிடவே கோதண்டத்தை வளைத்தாய்
கேளிக்கை பலசெய்தி ஸ்ரீலக்ஷ்மி காந்தனே
கேசவனே குறை தீர்த்தருள் கோவிந்தனே (கனக)

### பல்லவி

| $I_3$ O O | $I_3$ O O | $I_3$ O O | $I_3$ O O |
|---|---|---|---|
| தநிஸ் ஸ்ா ஸ்ஸ்<br>கனக குண் டலம்<br>பபப தநி ஸ்ா<br>இடையில் பீ. தாம்<br>தநிஸ்<br>(கனக) | நீநி ரி்ஸ்நீ தப<br>கையி ல்கங். கணம்<br>ரி்க்ரி ரி்நி ஸ்ா<br>பரமும் மார் பில் | பப தம பப தநி<br>கா. லில் சதங் கை<br>நிக்ரி ஸ்நிரிஸ்நிதபம<br>பதக்க மும் ...... | தநிஸ் தநிஸ்ா<br>கலக லக்குதே<br>பாத நிஸ்ா ,<br>மின்னு .தே |

### அனுபல்லவி

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரிநி ஸ்ா தநி<br>மனப யம் தனை<br>நிக்ரி ஸ்ா ஸ்ஸ்<br>மடித்த மா தவ<br>தநிஸ்<br>(கனக) | ரீ, நி க் ரீ<br>போக்கிடவே<br>ரிஸ் நிதப பம<br>னே.. சூர் ய. | தநிஸ் ரிஸ் க்ரி<br>மது முர. நர<br>பா, தா, தநி<br>நா ரா ய . | ஸ்ாஸ் தநிதா<br>காசு ர. னை<br>ஸ்ா , ; ;<br>ணா . . |

**சரணம்**

| $I_3$ O O | $I_3$ O O | $I_3$ O O | $I_3$ O O |
|---|---|---|---|
| நீத தப பா<br>காளி யன் மேல் | ப ப ம பா. தநி<br>நர்த்தனம் செய்தாய் | தநிஸ் ஸ்ஸ்ஸ் கோ.<br>வர்த்த தனைக்கைக் | நிநிரி நித பா<br>குடையாய்<br>பிடித்தாய் |
| மமப பநி தப<br>கோ.தை சீ.தையை | காம பமகா ரீ<br>கொண்டி ட..வே | ரிகா மா மம<br>கோ. தண்டத்தை | பத நீத பா<br>வ.ளைத்தாய் |
| பா தம பா பத<br>கே ளிக் கை பல | நீ, ஸ்ா ;<br>செய் த | தாநி ஸ்ா ஸ்ா<br>ஸ்ரீ . லக்ஷ் மி | ஸ்ாநி நித பா<br>கா ந் த. னே |
| நிக்ரி ஸ்ா ஸ்ா<br>கே. ச வ னே<br>தநிஸ்<br>(கனக) | நிரி நீத பா<br>குறை தீர்த்த ருள் | பா, தா நீ<br>கோ விந் த | ஸ்ா , ; ;<br>னே |